

மயிலாடுதுறை மாவட்ட கழகம் சார்பில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்கும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அண்ணா அறிவகத்தில் வார் ரூம்மை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து கணினியை இயக்கி வைத்தார். உடன் குத்தாலம் பி.கல்யாணம், பி.எம்.ஸ்ரீதர், குண்டாமணி (எ) என். செல்வராஜ், ஏ.ஆர். ராஜா, பஞ்சு.குமார், ப.முருகமணி, இராமசேயோன், இரா.மனோகரன், வி. எஸ்.பிரபாகர், தேசப்பன் மற்றும் பலர் உள்ளனர்.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நேற்று முன்தினம் (17.10.2025) சென்னை, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி இன்னசென்ட் திவ்யா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### அரியலூர் மாவட்டம்

# திருமானூரில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், அக். 19 -

அரியலூர் மாவட்டம், திருமானூரில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், திருமானூர் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப்பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி தீயணைப்பு துறை வாகனத்தின் செயல்பாட்டினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

திருமானூர் தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை திறந்து வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. இப்பகுதியில் அதிகளவில் தீ விபத்து ஏற்படுகின்ற சூழல் இருந்தது அதை தடுப்பதற்கும், அதற்கான தீர்வுகளுக்கும் கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டிருந்தது. அரியலூர் மாவட்டம் அதிகமான தொழிற்சாலைகள் உள்ள மாவட்டமாகும். இதனை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள திருமானூர் பகுதிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனி அறிவிப்பாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலகத்தை வழங்கியிருக்கிறார்.

இப்பகுதியின் வளர்ச்சியினை முன்னேற்றும் வகையில் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்த்து, பார்த்து திட்டங்களை தந்துகொண்டு இருக்கிறார். இன்று இரண்டு தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

இதுதான் மக்களுக்கான திராவிட மாடல் அரசு என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், முனைவர். ஆ.ரா.சிவராமன், முரளி, அனுசுயா, வீரபாகு, செந்தில்குமார், லதாபாலு, இரா.கென்னடி, அருண், கே.சி.ஜுபிகதிரவன் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல்லில் குழந்தை பாதுகாப்பு குறித்த கூராய்வுக் கூட்டம்!

## தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு தலைவர் புதுக்கோட்டை விஜயா – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. – ஆட்சியர் துர்கா மூர்த்தி பங்கேற்பு!

நாமக்கல், அக். 19-

நாமக்கல் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தைகள் பங்கேற்புத் துறைகளுக்கான கூராய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி, தலைமை தாங்கினார்.

நாமக்கல் மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினர்கள் முனைவர் மோ. கசிமீர் ராஜ், மருத்துவர் மோனா மட்டில்டா பாஸ்கர், மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் புதுக்கோட்டை விஜயா கலந்து கொண்டு, மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் குழந்தைகள் பங்கேற்புத் துறைகளுக்கான கூராய்வுக் கூட்டத்தில் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் RTE சட்டம் மற்றும் விதிகளின் கீழ் 2025-2026 ஆம் கல்வியாண்டில் சமூகம் மற்றும் பொருளாதார நலிவுற்றோர் பிரிவில் 147 பள்ளிகளில் 1591 மாணவர்கள் பள்ளி வாயிலாக 25 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு பதிவேற்றம் செய்துள்ளனர். மாணவர்களின் நலன் கருதி அனைத்து பள்ளிகளிலும் "மாணவர் மனசு" என்ற பெட்டி வைக்கப்பட்டு, வாரம் ஒருமுறை மாணாக்கர்களின் குறைகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் 2023-24 முதல் 2025-26 வரை பள்ளி இடைநின்ற 8000க்கும் மேற்பட்ட குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் குழந்தை திருமணத்தை தடுக்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மேலும், பொது இடங்கள், பள்ளி, கல்லூரிகளில் குழந்தைத் திருமணம் மற்றும் இளம் வயது கருவுற்றல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்த கிராமப் பகுதியில் உள்ள அரசு அலுவலர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் மூலமும் விழிப்புணர்வு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் நடப்பாண்டில் 45 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் ஒன்றிணைந்து நாமக்கல் மாவட்டத்தை குழந்தைகளுக்கான பாதுகாப்பான மாவட்டமாக மாற்றிடுவோம் என தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, அவர் தமிழ்நாடு அரசுப் பள்ளி விடுதிகள் மற்றும் பெண்கள், குழந்தைகள் இல்லங்கள் (கட்டுப்பாடு) சட்டத்தின் படி குழந்தைகள் தங்குவதற்கான பதிவுபெற்ற விடுதிகள் மற்றும் பதிவு பெறாத விடுதிகள், இளைஞர் நீதிச் சட்டம் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத இல்லங்கள், குழந்தைத் திருமணம் மற்றும் போக்சோ வழக்குகள், குழந்தைத் தொழிலாளர் தொடர்பாக ஆய்வுகள் மற்றும் வழக்குகள், 18 வயதிற்குட்பட்ட இளம் வயது கர்ப்பம் தொடர்பான நிலை, குழந்தைகளின் போதிய ஊட்டச்சத்து கிராம, வட்டார, நகராட்சி, பேரூராட்சி, மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழு காலாண்டுக் கூட்டங்கள், குழந்தைத் திருமணம், போக்சோ, குழந்தைத் தொழிலாளர், இளம் வயது கர்ப்பம் அதிகளவு நடைபெறும் இடங்கள் கண்டறிந்து விழிப்புணர்வு செய்யப்பட்ட விவரங்கள், நிதி ஆதரவு திட்டத்தில் பயன்பெறும் குழந்தைகளின் நிலை, கொரோனா பேரிடரால் பெற்றோர் இருவர் அல்லது ஒருவரை இழந்த குழந்தைகளின் நிலை, குழந்தைகள் இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் நிலை, பாலியல் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பயனுறும் குழந்தைகள், 1098 என்ற குழந்தைகளின் அரசு உதவி எண்ணில் பெறப்பட்ட புகார் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து குறைச் சார்ந்த அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், திருச்செங்கோடு சார் ஆட்சியர் அங்கித் குமார் ஜெயின், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் வே.சாந்தி, முதன்மைக் கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட நல அலுவலர் க.பூங்கொடி, மாவட்ட சமூக நல அலுவலர் தி.காயத்திரி, மாவட்ட திட்ட அலுவலர் எப்.போர்ஷியா ரூபி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வி.ஈ.சந்தியா, பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சார்ந்த) கோ.கற்பகம் உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சியில் பொது சுகாதாரக் குழு தலைவர் மாதேஸ்வரன் தலைமையில் நிலை குழு கூட்டம் ஓசூர் மாநகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் சபீர் ஆலம், மாநகர சுகாதார அலுவலர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் செவிலியர்கள் சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அச்சுறுத்தி வரும் தெரு நாய்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

### அ.தி.மு.க. என்ற திருட்டுக் கடையை திருட்டுத்தனமாக கைப்பற்றிய

# எடப்பாடி பழனிசாமி தி.மு.க.வை எள்ளி நகையாடுவதா?

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கேள்வி!

சென்னை, அக். 19-

போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேற்று முன்தினம் (17.10.2025) சென்னை, தலைமைச் செயலகம், பிரதான கட்டிடம், நான்காவது நுழைவாயில் அருகில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருவாறு

எதிர்க்கட்சித் தலைவர் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய எடப்பாடி பழனிசாமி, திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து ஒரு பேட்டி அளித்திருக்கிறார். அவருடைய நிலைமை இவ்வளவு மோசமாகப் போகும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாத நிலைக்கு சென்று விட்டார். சட்டமன்றத்தில் பேச வேண்டியவர்; மக்கள் மன்றத்தில் பேச வேண்டியவர்; சட்டமன்ற அரசியல் மக்கள் மன்ற அரசியலைத் தாண்டி தற்போது கடைசியாக இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்க்கும் அரசியல் செய்ய வேண்டிய சூழலில் தள்ளப் பட்டுவிட்டார் என்பது தான் பாவமாக இருக்கிறது. ஒரு அல்வா பாக்கெட்டை வைத்துக்கொண்டு உருட்டுக்கடை அல்வா என்றெல்லாம் கதை விட்டிருக்கிறார். அவர்தான் இன்று திருட்டுக்கடை பழனிசாமியாக இருக்கிறார்.

### அ.தி.மு.க.வை லீசுக்கு எடுத்துள்ளார் எடப்பாடி!

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் மறைவிற்குப் பிறகு எப்படி இவர் கைக்கு வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த அ.தி.மு.க. என்ற கம்பெனியை சசிகலாவிடமிருந்து லீசுக்கு எடுத்து நடத்த ஆரம்பித்தவர் பா.ஜ.க.வுடன் சேர்ந்து கொண்டு சசிகலாவை சிறைக்கு அனுப்பிவிட்டு திருட்டு கடை தனக்கு கைப்பற்றினார். அதற்குப் பிறகு டி.டி.வி. தினகரனை ஏமாற்றினார். அவரிடம் இருந்து கைப்பற்றினார். அதற்கு பிறகு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களுடன் ஒரு கூட்டணி வைத்துக்கொண்டு நீ பாதி நான் பாதி கண்ணே... என்று ஒரு பார்ட்னர்ஷிப் ஆரம்பித்து ஐந்து வருடம் கழித்தார். அதற்குப் பிறகு அவரையும் ஏமாற்றினார். அவரிடம் இருந்தும் தட்டி தூக்கினார். திருட்டு கடை...

இதெல்லாம் முடிந்தது. எதிர்க்கட்சியானார். ஒரு ஐவர் அணியை உடன் வைத்துக்கொண்டு சுற்றினார். அதற்குப் பிறகு இருவரணி ஆகிவிட்டது. அந்த ஐவரணியையும் ஏமாற்றி திருட்டு கடையை வேலுமணி, தங்கமணி என்ற இருவரை மட்டுமே தன் உடன் வைத்துக்கொண்டு இருவர் அணியாக வைத்துக் கொண்டிருந்தார். தற்போது கடைசியாக டெல்லிக்கு சென்ற பிறகு என்ன ஆனார்? அந்த இருவர் அணியையும் கழற்றிவிட்டு தன்னுடைய திருமகன் மிதுன் பழனிசாமியை மட்டும் வைத்துக்கொண்டு இன்றைக்கு அவர் செல்கிறார். இப்படி அ.தி.மு.க.வை ஒரு திருட்டுக்கடை போல எல்லோரிடமும் கைப்பற்றி இருக்கின்றவர் - தி.மு.க.வை பார்த்து உருட்டுக்கடை என்று சொல்வது எவ்வளவு வேதனையாக இருக்கிறது.

தி.மு.க. என்ன செய்திருக்கிறது? என்று மகளிர் உரிமைத் தொகை பெறும் ஒரு கோடியே 15 இலட்சம் பேரிடம் சென்று கேட்டுப் பார்க்கட்டும். உண்மையாக அந்த திட்டம் நடைபெறுகிறதா? உருட்டா? என்று...

புதுமைப் பெண் திட்டத்தில் கல்லூரியில் தமிழகத்தில் பெண் குழந்தைகள் படிக்கிறார்கள். அவர்களிடம் சென்று கேட்கட்டும்



இது உருட்டா? உண்மையா? என்று...

தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு மாணவர்கள் கல்லூரியில் படிக்கிறார்கள். அவர்களைச் சென்று கேட்கட்டும் உருட்டா? உண்மையா? என்று...

### உண்மையை மறைத்து கதை விடுகிறார் எடப்பாடி!

காலை உணவு திட்டம் பயிலும் பிள்ளைகளிடம் சென்று கேட்கட்டும். இப்படி நடக்கின்ற திட்டங்களை எல்லாம் மறைத்து விட்டு நீட் ஏன் இரத்தாகவில்லை? கல்வி கடன் ஏன் இரத்தாகவில்லை? என்று கேட்கிறார். இதெல்லாம் ஒன்றிய அரசின் அதிகாரத்தில் வருவது என்பது அவருக்கு தெரியும். தெரியவில்லை என்றால், அவர் ஏன் முதலமைச்சராக இருக்கிறார் என்ற கேள்வியே வரும். எதையெல்லாம் உண்மையோ அதையெல்லாம் மறைத்துவிட்டு எதையெல்லாம் கதை கட்டலாமோ அதையெல்லாம் வைத்துக் கொண்டு கதை விடுகிறார்.

இவருக்கு என்ன உருட்டுகடை என்றால், இவர்கள் கொடுத்த வாக்குறுதி பெண்களுக்கு செல்போன் கொடுப்போம் என்று கூறியது இரு சக்கர வாகனம் கொடுப்போம் என்று கூறியது இதுபோன்று பெரிய பட்டியல் இருக்கிறது. இவர்கள் உருட்டிய உருட்டு.

எனவே மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றிக் காட்டிய அரசு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசு. இன்றைக்கு இவரை பார்த்து விடியல் பயணம் திட்டத்தை வழங்கி இருப்பதை பார்த்து அருகில் உள்ள மாநிலங்களில் எல்லாம் ஒவ்வொரு மாநிலமாக அமல்படுத்தி வருவதை நாம் பார்த்தோம். காலை உணவு திட்டத்தை இங்கு வந்த பஞ்சாப் மாநில முதல்வர் பகவத்ந் மான் சிங் பாராட்டினார். நான் எங்கள் மாநிலத்திலும் அமல்படுத்த போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி எங்கள் மாநிலத்திலும் நாங்கள் அமல்படுத்த போகிறோம் என்று அவர் கூறினார். இப்படி வெளிப்படையாக இங்கு வருகின்ற முதலமைச்சர்கள் பொதுவெளியில் மக்கள் முன்பே சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மிகச்சிறப்பான திட்டங்கள் என்று சொல்கிறார்கள். நாங்களும் அந்த வழியை பின்பற்றப் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சராக இருக்கும் முதலமைச்சரை கிண்டல் செய்வதாக நினைத்துக்கொண்டு கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு இவர் இன்றைக்கு இந்த அரசியலை செய்கிறார். அதுவும் உண்மையான அல்வா அல்ல. அதில் பஞ்சு இருக்கிறது என்று வீடியோ பார்த்து பிறகுதான் தெரிந்தது. கடைசியில் அதுவும் திருட்டு அல்வாவாகத் தான் இருக்கிறது.

இந்த இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் அரசியல் அவருக்கு ஏன் வந்தது என்றால் சேர்வார் தோஷம். தற்போது அவர் யாரிடம் சேர்ந்து இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கு இருக்கின்ற சிறு பிள்ளைகள் பள்ளி பிள்ளைகள் இன்ஸ்டாகிராமில் போடுவதை பார்த்துவிட்டு அதில் ஒருவர் கேட்டார். அந்த நீதிபதிக்கு கூட பின்பற்றுபவர்கள் இல்லை. எங்களுக்கு தான் பின்பற்று பவர்கள் இருக்கிறார்கள் என்று... அதுபோன்று அந்த பின்பற்றுபவர்களுக்கு போட்டியாக பின்பற்று பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இன்ஸ்டாகிராமிலும், ரீல்ஸிலும் அதிகப் படுத்துவதற்கு ஒரு பேட்டியை கொடுத்திருக்கிறார்.

எனவே, நான் எடப்பாடி பழனிசாமிக்கு சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்ற கழகம் 75 ஆண்டு கால வரலாறு உள்ள கழகம். ஒரு மகத்தான இயக்கம். நவீன தமிழகத்தை உருவாக்கிய தலைவர் கலைஞர் தலைமையில் இயங்கிய இயக்கம். இந்தியாவிலேயே ஒரு பெரிய சமூக கட்டமைப்புடன் அடிப்படை கட்டமைப்புடன் இருக்கிறது என்றால் அது தமிழ்நாடு தான் என்பதை மற்ற மாநிலத்தவர் பாராட்டுகிறார்கள் என்றால் அத்தனைக்கும் காரணம் இந்த திராவிட முன்னேற்ற கழகம். இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை நீங்கள் எள்ளி நகையாடுவதால் நீங்கள் பெரிய ஆளாக ஆகிவிட முடியாது. இது உங்கள் கட்சியை நிறுவிய மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆ.ரை பார்த்த கட்சி. உங்கள் கட்சியின் முன்னாள் முதல்வராக இருந்த மறைந்த அம்மையாரைப் பார்த்த கட்சி. நீங்கள் எல்லாம் பழனிசாமி எல்லாம் எம்மாத்திரம். ஏதோ காலக்கோளாறு கம்பெனியை தங்களிடம் லீசுக்கு கொடுத்துவிட்டு சிறைக்குச் சென்ற காரணத்தினால் இன்றைக்கு அ.தி.மு.க. என்ற திருட்டு கடையை திருட்டுத்தனமாக கைப்பற்றி கையில் வைத்துக் கொண்டு தி.மு.க.வை எள்ளி நகையாடுகிற இந்த பணியை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு மேல் இந்த வேலையில் இறங்க கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டியளித்தார்.



கோவை வடக்கு மாவட்டம் இடையர்பாளையம் பகுதி 35ஆவது வார்டில் இடையர் பாளையம் பகுதி கழகப் பொறுப்பாளர் மதியழகன் முன்னிலை வகிக்க, வட்ட அவைத்தலைவர் சோ. துரைப்பாண்டியன் தலைமையில், வட்டச் செயலாளர் ஆர் குமரேசன் நிகழ்ச்சியினை துவக்கி வைக்க, தூய்மைப் பணியாளர்களுக்கு வேட்டி, சேலைகள், ஸ்வீட் பாக்ஸ்கள், பட்டாசுகள், பரிசுப் பொருட்கள் என மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கண்ணகி, நடராஜன், பாலசுப்ரமணியன், மேஸ்திரி செல்வம், கோவை கியர்ஸ் உரிமையாளர் சந்திரலிங்கம், சதீஷ், சுப்பிரமணியன், டி.மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.